# மாநகர - நகர- பேரூராட்சிகளின் சாலைப் பணிகள் - பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் விரிவாக்கம்!

## அமைச்சர் கே.என். நேரு பதிலுரை...

4 - ஆம் பக்கத் தொடர்ச்சி

3 ஆண்டு காலத்தில் இவ்வளவு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இந்த ஆண்டு என்ன நடைபெறவிருக்கிறது என்பதை அறிவிப்பின்மூலம் உங்களிடம் சொல்கிறேன். நேரம் அதிகமாகிவிடும். எனவே, அதனை நீங்களே படித்துக்கொள்ளலாம். குறிப்பாக, ஒன்றிரண்டை மட்டும் சொல்கிறேன். ரூ.8,672 கோடி மதிப்பீட்டில் 13,387 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைப் பணிகள் முடிவுற்றும், 1,261கிலோ மீட்டர் சாலைப் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. மேலும் இந்த ஆண்டு 2,513 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.1,272 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. கொசஸ்தலை ஆறு மற்றும் சென்னையைச் சுற்றி நடைபெறும் பணிகள் உட்பட ரூ.6,778 கோடி மதிப்பீட்டில் 2,641 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டும் மேலும் 669 கிலோ மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றும் வருகின்றன. இங்கே ரூ.7,390 கோடி மதிப்பீட்டில் 191 குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.8,911 கோடி மதிப்பீட்டில் 28 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.858 கோடி மதிப்பீட்டில் 7.42 இலட்சம் எண்ணிக்கையிலான தெரு விளக்குகள், ஆற்றல்மிகு LED விளக்குகளாக மாற்றம் செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 4,000 தெரு விளக்குகளில், 2,000 விளக்குகள் மட்டும்தான் வந்திருக்கிறது என்றும் மீதமுள்ள விளக்குகள் வருவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் உறுப்பினர் திரு. சதாசிவம் அவர்கள் இங்கே சொன்னார்கள். என்னவென்றால், LED வரும்போதே TENDER வைத்தோம். விளக்கு தகுதியானதா, இதனை எடுக்கலாமா என்று ஆய்வு செய்யப்பட்டது. இரண்டே இரண்டு COMPANYதான் இருக்கிறது. அதனால் விளக்குகள் வருவதில் சற்று தாமதமாகிறது. எனவே, விரைவில் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் செய்கிறோம். எனவே, 1,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 55 பேருந்து நிலைய பணிகள் முடிவுற்றும், மேலும் 100 பேருந்து நிலைய பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.690 கோடி மதிப்பீட்டில் 52 சந்தைகள் கட்டி முடிக்கப்பட்டும், மேலும் 86 இடங்களில் சந்தைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.198 கோடி மதிப்பீட்டில் 79 அறிவுசார் மையங்கள் கட்டி முடிக்கப்பட்டும், மேலும் 21 அறிவுசார் மையப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.424 கோடி மதிப்பீட்டில் 681 பூங்கா அபிவிருத்திப் பணிகள் முடிக்கப்பட்டும், மேலும் 396 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### ரூ.700 கோடி மதிப்பில் நீர் நிலைகள் சீரமைப்பு

ரூ.700 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நீர்நிலைகளை தூர் வாரி கரைகள் பலப்படுத்தி, சீரமைக்கப்பட்டுள்ளன. ரூ.373 கோடி மதிப்பீட்டில் புதிய மின் மயானங்கள் நிறுவுதல் மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று கொண்டு வருகின்றன. ரூ.153 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான அலுவலகக் கட்டங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றுள்ளன. ரூ.771 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டங்கள் கட்டப்பட்டுள்ளன. ரூ.316 கோடி மதிப்பீட்டில் BIOMINING மூலம் தேக்க திடவுகளை அகற்றி நிலத்தினை மீட்டெடுக்கும் பணி பல்வேறு நகரங்களில் முடிவுறும் நிலையில் உள்ளது. இதன்மூலம் 523 ஏக்கர் நிலங்கள் மீட்டெடுக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சி பெருங்குடியில் ரூ.351 கோடி மதிப்பீட்டில் திடக் கழிவுகள் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணி முடிவுறும்போது 225 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் மீட்டெடுக்கப்படும். மேலும், சென்னை மாநகரத்தில் கொடுங்கையூர் குப்பை கிடங்கிலிருந்து குப்பைகளை அகற்றுவதற்கு ரூ.648 கோடி மதிப்பீட்டில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. பணிகள் முடிவுறும்போது 252 ஏக்கர் பரப்பளவு நிலம் மீட்டெடுக்கப்படும். ரூ.1,100 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகரத்தில் ஐந்து மேம்பாலங்கள் முடிவுற்றும், மேலும் 14 மேம்பாலங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.152 கோடி மதிப்பீட்டில் 72 ஆயிரத்து 214 தனி நபர் கழிப்பறைகளும், 2,081 சமுதாய கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. ரூ.500 கோடி மதிப்பீட்டில் திடக் கழிவு மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகளுக்கு வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### பணியாளர்கள் நியமனம்

சென்னை பெருநகர திறன்மிகு போக்குவரத்து திட்டம் ரூ.904 கோடி மதிப்பீட்டில் JICA கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தவிர, பல்வேறு பணிகளுக்கு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு ரூ.5,209 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்களுக்கு விரைந்து சேவை செய்வதற்கு ஏதுவாக உள்ளாட்சிகளின் தரத்திற்கேற்ப பணியாளர்கள் நியமனம் செய்ய நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு தெரியும். எல்லா இடங்களிலும் தலைவர்கள் வந்த போதும் சரி; MLAs வந்தபோதும் சரி; அமைச்சர்கள் வந்த போதும் சரி எங்களுடைய பேரூராட்சிகளில் ஆட்கள் இல்லை; ENGINEERS இல்லை; பணி செய்வதற்கு DRAUGHTSMAN இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு முதற்கட்டமாக 2,500 பேர்களை எடுத்துக்கொள்ளலாம் என்ற உத்தரவிட்டார்கள். அந்த 2,500, 2,700 பேர்களையும் எப்படி எடுப்பது என்று சொன்னால், அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலமாக பரிட்சை எழுதச் சொல்லி, அந்தப் பரிட்சையின் மூலமாக யார் அதிகமான மதிப்பெண்கள் பெறுகிறார்களோ அவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்று ஒரு உத்தரவிட்டு, வருகின்ற 29, 30 ஆகிய தேதிகளிலே அந்தப் பரிட்சை நடைபெறவிருக்கிறது. எனவே, புதிதாக இந்த 2,500 பேர் மட்டுமல்ல, இன்னொரு 3,000 பேர்களை தேர்ந்தெடுக்க இருக்கிற அறிவிப்பும் வருகிறது. எனவே, விரைவில் அத்தனை இடங்களையும் நிரப்புவதற்கு ஓரிரு மாதங்களில். . .(குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சிகளில் மின் கட்டணம், குடிநீர் விநியோகக் கட்டணம், பணியாளர்களுக்கான ஊதியம், ஏற்கெனவே உள்ளாட்சிகளால் உருவாக்கப்பட்ட சொத்தினைப் பராமரிப்பதற்கு ஒவ்வொரு வருடமும் ரூ.4,000 கோடி நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக என்ன செய்யப்படுகிறது என்பது பற்றி தங்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். கிட்டதட்ட புதிதாக நம்முடைய முதலமைச்சர் அறிவித்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இரண்டாம் கட்டம் பெரம்பலூர் நகராட்சி குடிநீர்த் திட்டம் இவற்றை நம்முடைய திருவண்ணாமலை மாவட்ட அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. நிதி வந்தவுடன் திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற பகுதிகளுக்கு அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 13 பாதாளச் சாக்கடை திட்டங்கள் ரூ.1,707 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், 12 பாதாளச் சாக்கடை திட்டங்கள் ரூ.3,407 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவருகின்றன. மேலும், ஒசூர் மாநகராட்சி மற்றும் செங்கல்பட்டு நகராட்சி ஆகியவற்றிற்கு ரூ.770 கோடி மதிப்பீட்டில் இரண்டு புதிய பாதாளச் சாக்கடை திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட MICHAUNG புயலினால் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 12 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பாதிப்படைந்தன. இதனை போர்க்கால அடிப்படையில் ரூ.1.28 கோடி செலவில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன. தற்போது நிரந்தரமாகச் சீரமைக்க ரூ. 3.89 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வடகிழக்கு பருவமழை வெள்ளத்தால் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள 70 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் கடுமையாக சேதமடைந்தன. அந்தச் சேதங்கள் ரூ.34.13 கோடி செலவில் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தற்போது, நிரந்தரமாக சீரமைக்க ரூ.145.48 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### சென்னை குடிநீர் வாரியம்

சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும், நம்முடைய TNUIFSL வழியாக 473 கோடி, CMDA மூலமாக ரூ.473 கோடி தந்து ரூ.946 கோடிக்கு வட சென்னை வளர்ச்சி திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், குறுக்குப்பேட்டை, கொரட்டூர் மற்றும் இராஜீவ் காந்தி சாலை ஆகியவற்றில் ரூ.126.27 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. சென்னைக்கு அருகிலுள்ள நெம்மேலியில் சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு தண்ணீரைக் கொண்ட, கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் முதலமைச்சர் அவர்களால் 2422024 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

மேலும், போரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மற்றொரு கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் குடிநீர் பகிர்மான நிலையங்கள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் SMART METERகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆலந்தூர், ஆயிரம் விளக்கு மற்றும் கே.கே. நகரில் மொத்தம் 221 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்த கழிவுநீர்க் கட்டமைப்புகளை சீரமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மாநகரோடு இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில், மூன்றில் கழிவுநீர்க் கட்டமைப்புகள் 143 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிகள் மற்றும் மாதவரத்தில் விடுபட்ட பகுதிகளிலும் ரூபாய் 3 ஆயிரத்து 161 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையிலுள்ள நீர்வழித்தடங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 946 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான திட்ட மேலாண்மை TUFIDCO, TNUIFSL மற்றும் TWIC நிறுவனங்கள் செயல்படுத்தி வருகின்றன.

திருப்பூர் பகுதிக்கு, குடிநீர்த் திட்ட மற்றும் கழிவுநீரகற்றலில் சம்பந்தப்பட்ட பணிகளை தனியார் பங்களிப்புடன் புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தி வருகிறது. மேலும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஆறுகள், நீர்நிலைகள், வாய்க்கால்கள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணிகள் திட்ட மேலாண்மைமூலம் (CRRT) மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, நான் துறை சம்பந்தமான அறிவிப்புகளுக்கு வருகிறேன். அறிவிப்பிலே முக்கியமான(குறுக்கீடுகள்) திருநெல்வேலிக்கு குடிநீர்த் திட்டம் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) என்ன வேண்டுமென்று நீங்கள் சொல்லுங்கள். நான் செய்கிறேன். (குறுக்கீடுகள்) கலைஞர் மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.1,000 கோடி இருக்கிறது. எந்தத் திட்டம் வந்தாலும், உங்களுக்குத் தேவையென்றால் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

பேரவைத் தலைவர்: திருநெல்வேலிக்கு மட்டும் குடிநீர்த் திட்டத்துக்காக 1,028 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி, களக்காடு, நாங்குநேரி போன்ற அவ்வளவு ஊருக்கும் தந்திருக்கிறார்கள். அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

### சேலம் தொகுதிக்கு குடிநீர் திட்டம்

அமைச்சர் கே.என். நேரு: சேலம் தொகுதிக்கு மட்டும் குடிநீர்த் திட்ட பணிகளுக்கு மட்டும் 500 கோடி ரூபாயும், பாதாள சாக்கடைத் திட்டம், மேம்பாலங்கள் போன்ற திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாலம் கட்டுகிறோம் என்று சொன்னோமா?

ஒவ்வொரு வருடமும் கலைஞர் மேம்பாட்டுத்

## வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.946 கோடியில் பணிகள்!

திட்டத்தின்கீழ் 1,000 கோடி ரூபாய் நிதி தருகிறார்கள். குறிப்பாக, இதிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய கலைஞர் அவர்கள் முதன்முதலில் போட்டியிட்ட குளித்தலை சட்டமன்றத் தொகுதியையொட்டியிருக்கிற கிருஷ்ணராயபுரம் பகுதி, தோகைமலைப் பகுதி. கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்கு 100 கோடி ரூபாய் திட்டத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை அன்றைக்கு ஆரம்பித்து வைத்தார்கள். இன்றைக்கு மக்கள்தொகை பெருக்கத்தின் காரணமாக, மணப்பாறை நகரம், வையம்பட்டி மற்றும் பொன்னம்பட்டி பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. இரண்டையும் சேர்த்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் 800 கோடி ரூபாய் செலவிலே அமைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, ஒன்றைமட்டும் நான் உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். சென்னை மாநகராட்சியில் 200 வட்டங்கள் இருக்கின்றன. 200 மாமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆனால், 55 இலட்சம் மக்கள், 89 இலட்சம் மக்கள் வாக்காளர்களாக இருக்கிறார்கள். எனவே, ஒரு இடத்தில் 40 ஆயிரம், ஒரு இடத்தில் 15 ஆயிரம் என்றிருப்பதை மாற்றி, சென்னை மாநகரை சரிசெய்கிறபோது, கிட்டத்தட்ட 200லிருந்து 300 WARD MEMBERகள் வருவார்கள். எனவே, 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மாமன்றக் கட்டடம் ஒன்று சென்னை மாநகராட்சியில் கட்டுவதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள். அதேபோல, 63 அறிவிப்புகளை உங்களுக்குக் கொடுத்திருக்கிறோம்.

### அறிவிப்புகள்

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**1.** திருச்செங்கோடு, கொல்லங்கோடு, சோளிங்கர் மற்றும் கம்பம் ஆகிய நகராட்சிகளில் ரூ.45.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.

**2.** ஒசூர், திருப்பூர், கும்பகோணம், காஞ்சிபுரம், கரூர் ஆகிய மாநகராட்சிகள், மதுராந்தகம், எடப்பாடி, குளச்சல், வடலூர், கோவில்பட்டி, மானாமதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், சிதம்பரம், பண்ருட்டி, அதிராமபட்டினம், திருப்பத்தூர், வாணியம்பாடி, பள்ளப்பட்டி, கம்பம், பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகராட்சிகளிலுள்ள பேருந்து நிலையங்கள் ரூ.76.30 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**3.** கடலூர், தாம்பரம், திண்டுக்கல், கரூர் மற்றும் ஒசூர் ஆகிய மாநகராட்சிகளிலும் இராஜபாளையம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சிதம்பரம், விருத்தாசலம், மறைமலைநகர், பட்டுக்கோட்டை, மயிலாடுதுறை, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, துறையூர், அரக்கோணம், திருவத்திபுரம், விழுப்புரம், திண்டிவனம், மேட்டூர், இடங்கணசாலை, நாமக்கல், பள்ளப்பட்டி, புகளூர், புஞ்சை புளியம்பட்டி, திருமங்கலம், திருச்செங்கோடு, கோபிசெட்டிப்பாளையம், தாரமங்கலம், திருப்பத்தூர், கம்பம், சிவகங்கை, வாணியம்பாடி, நெல்லிக்குப்பம், திருக்கோவிலூர், மானாமதுரை மற்றும் பெரியகுளம் ஆகிய நகராட்சிகளில் புதிய வணிக வளாகங்கள் ரூ.145.82 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**4.** அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் குறைந்தபட்சம் ஒரு நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படும் என்ற இவ்வரசின் கொள்கை முடிவின்படி மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் 92 நவீன எரிவாயு தகன மேடைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆண்டு தாம்பரம் மாநகராட்சி மற்றும் மன்னார்குடி, வாணியம்பாடி ஆகிய நகராட்சிகளில் புதிய நவீன எரிவாயு தகன மேடைகளும், அரக்கோணம், ஆத்தூர் மற்றும் தேனிஅல்லிநகரம் ஆகிய நகராட்சிகளிலுள்ள எரிவாயு தகன மேடையை மேம்படுத்துதலும் ரூ.7.79 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**5.** 50 புதிய பூங்காக்கள் ரூ.30.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். மாணாக்கர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய அறிவியல் பூங்காக்கள், முதற்கட்டமாக சேலம், தாம்பரம், மதுரை, ஒசூர் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகளிலும், விழுப்புரம், உதகமண்டலம், கொடைக்கானல், மயிலாடுதுறை மற்றும் ராணிப்பேட்டை நகராட்சிகளிலும் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**6.** இந்த ஆண்டில் 20 நீர்நிலைகள் ரூ.8.20 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்தி, அவற்றின்மேல் நடைபாதைகள் மற்றும் பசுமைவெளிகள் அமைத்து அழகுபடுத்தப்படும். திருச்சிராப்பள்ளி, ஒசூர் மற்றும் ஆவடி மாநகராட்சிகளில் 50 ஏக்கர் பரப்பளவிற்கு அதிகமாக உள்ள நீர்நிலைகளை குழந்தைகள் பூங்கா உள்ளிட்ட பிற வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

**7.** தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள், திருச்செந்தூர், ஜெயங்கொண்டம், செங்கல்பட்டு, நந்திவரம்-கூடுவாஞ்சேரி, மயிலாடுதுறை, மன்னார்குடி, தேனி-அல்லி நகரம், கொடைக்கானல், உதகமண்டலம் மற்றும் கூத்தாநல்லூர் ஆகிய நகராட்சிகளில் ரூ.346.80 கோடி மதிப்பீட்டில் புதிய சந்தைகள் அமைக்கப்படும். மேலும், பண்ருட்டி, கொல்லங்கோடு மற்றும் பள்ளப்பட்டி ஆகிய நகராட்சிகளில் ஏற்கெனவே உள்ள சந்தைகளை ரூ.12.14 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**8.** திருச்சி மாநகராட்சி மற்றும் திருவண்ணாமலை நகராட்சி ஆகியவற்றிலுள்ள பழைய தேக்கத் திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் ரூ.55.70 கோடி மதிப்பீட்டில் அகற்றி நிலம் மீட்டெடுக்கப்படும்.

**9.** கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள் மற்றும் திண்டிவனம் நகராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் நீரினை ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ் முறையில் சுத்திகரிப்பு செய்து மறுஉபயோகத்திற்கு பயன்படுத்துவதற்கு கலந்தாலோசகர்மூலம் சாத்தியக்கூறுகள் ஆராயப்படும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய வழிகாட்டுதலின்படி OCEMS முறையில் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**10.** திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் கோயம்புத்தூர், தாம்பரம், மதுரை, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் உருவாகக்கூடிய அனைத்து திடக்கழிவு களையும் மறுசுழற்சி செய்து அப்புறப்படுத்தி குப்பையில்லா நகரமாக உருவாக்கிட கலந்தாலோசகர் நியமிக்கப்படும். திருச்சி, மதுரை, தாம்பரம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும். உலர்கழிவுகளை பொது எரியூட்டும் இயந்திரங்களிலும், மறுசுழற்சிக்கு பயன்படும் பொருட்களை தரம் பிரித்து கையாளுவதற்கும் முதற்கட்டமாக நான்கு நகரங்களில் “பொது மையங்கள்” அமைக்கப்படும். இதனால் தினமும் உருவாகும் திடக்கழிவுகளை அன்றையதினமே அறிவியல் முறையில் கையாண்டு, மாற்றுப்பொருள் (BY PRODUCT) உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11.** மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 418.57 கி.மீ. மண் சாலைகள் ரூ.285.73 கோடி மதிப்பீட்டில் தார்ச்சாலை, கான்கிரீட் அல்லது பேவர்பிளாக் சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

**12.** மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் ஆகியவற்றால் சேதமடைந்த சாலைகள் 2016.41 கி.மீ. நீளத்திற்கு ரூ.987.19 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

**13.** அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் பயன்பாட்டிலுள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தவும், கழிப்பிடங்களின் இயக்குதலும் பராமரித்தலும் (O&M), CSR நிதி மற்றும் தனியார் பங்களிப்பு (P P P) மூலம் மேற்கொள்ளப்படும்.

**14.** தமிழ்நாட்டில் கொடைக்கானல், காரைக்குடி, வால்பாறை, உதகமண்டலம் மற்றும் குன்னூர் நகராட்சிகளில் காய்கறி மற்றும் உணவுக் கழிவுகள் பயோகேஸ் மையங்கள்மூலம் கையாளப்பட்டு பயோகேஸ் தயாரிக்கப்படுகிறது. மேலும், சிவகாசி மற்றும் கடலூர் மாநகராட்சிகளிலும், மறைமலைநகர், திருவேற்காடு, குடியாத்தம், ஆம்பூர், ராணிப்பேட்டை, வாணியம்பாடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, இராமேஸ்வரம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, விருதுநகர், விருத்தாசலம், மன்னார்குடி, அருப்புக்கோட்டை, போடிநாயக்கனூர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய நகராட்சிகளில் ரூ.32 கோடி மதிப்பீட்டில் புதிதாக பயோகேஸ் மையங்கள் அமைக்கப்படும். ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 38 பயோகேஸ் மையங்கள் ரூ.22.80 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**15.** 24x7 குடிநீர் விநியோகம் 12 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தேர்வு செய்யப்பட்ட வார்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதிகளிலும் படிப்படியாக விரிவாக்கம் செய்திட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

**16.** 24 நகராட்சிகளில் பயன்படுத்தப்பட்ட கழிவுநீரை பாதுகாப்பாக சேகரித்து, சுத்திகரித்து மறுபயன்பாட்டிற்கு கொண்டுவர கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.360.88 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். விடுபட்ட 31 நகராட்சிகளுக்கும் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு, அருகில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளுடன் கூட்டு முறையில் (CLUSTER) அமைக்கப்படும்.

**17.** நகர்ப்புரங்களில் உள்ள வீடுகளில் மேற்கூரைகளில் சேகரமாகும் மழைநீரை குழாய்கள்மூலம் சேகரித்து வறண்ட பயன்படாத ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் பொது கிணறுகளில் செலுத்தி நிலத்தடி நீரை உயர்த்தும் வகையில் “மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள்” அமைக்கப்படும்.

**18.** மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தற்போது பயன்பாட்டிலிருக்கும் இறைச்சிக் கூடங்கள் ரூ.20 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும். இறைச்சிக் கூடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்தம் செய்ய சுத்திகரிப்பு சாதனங்கள் அமைக்கப்படும்.

**19.** நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட உள்ளாட்சிகள் தவிர பிற உள்ளாட்சிகளில், அறிவிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளில் (NOTIFIED SLUMS) முதற்கட்டமாக 10 படிப்பகங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**20.** நகர்ப்புர உள்ளாட்சிகளின் பள்ளிக்கூடங்களில் SMART CLASS ROOMS கல்வி நிதியின்கீழ் 50 எண்ணிக்கையில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்படும்.

**21.** அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பாதாள சாக்கடை வசதியினை நடைமுறைப்படுத்த இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் ராணிப்பேட்டை ஆகிய நகராட்சிகளில் முதற்கட்டமாக கள்ளக்குறிச்சி நகராட்சியில் ரூ.115 கோடியில் இந்த ஆண்டு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### பெருநகர சென்னை மாநகராட்சிக்கான அறிவிப்புகள்

**22.** பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதே இவ்வரசின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்த ஆண்டு ரூ.35 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் மேம்படுத்தப்படும் மற்றும் 16 புதிய பள்ளிக் கட்டடங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**23.** பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் கற்கும் செயல்திறனை மேம்படுத்த ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் புதிய 100 ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்படும்.

**24.** நகர்ப்புறங்களை பசுமையாக்கி இயற்கை சூழலை மேம்படுத்த 14 புதிய பூங்காக்கள் மற்றும் 6 நவீன விளையாட்டுத் திடல்கள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்படும்.

**25.** பெருநகர சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும்பொருட்டு, எண்ணூர் நெடுஞ்சாலையில் சந்திக்கடவு எண் 2Aல் மேம்பாலம் ரூ.75 கோடி மதிப்பீட்டிலும், கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே தண்டையார்பேட்டை மற்றும் கடும்பாடி அம்மன் கோயில் தெருவை இணைக்கும் பாலத்தை இடித்துவிட்டு புதியதாக பாலம் ரூ.8.2 கோடி மதிப்பீட்டிலும், தமிழர் வீதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த பாலத்தை இடித்துவிட்டு புதியதாக பாலம் ரூ.4.38 கோடி மதிப்பீட்டிலும், மேலும் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே 3 இடங்களில் ECR மற்றும் OMRஐ இணைக்கும் வகையில் வெங்கடேசபுரம்-இளங்கோ நகர், மணியம்மை தெரு-வீரமணி சாலை மற்றும் அறிஞர் அண்ணாசாலை-பாண்டியன் சாலை ஆகிய இடங்களில் இரும்பு பாலங்கள் மொத்தம் ரூ.21 கோடி மதிப்பீட்டிலும் அமைக்கப்படும்.

**26.** பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள நீர்நிலைகளை புனரமைப்பதன்மூலம் அதன் கொள்ளளவு அதிகரிப்பதுடன் நிலத்தடிநீர் மட்டமும் உயரும். இந்த ஆண்டில் 10 நீர்நிலைகள் ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

**27.** பெருநகர சென்னை மாநகராட்சியில் வீடுகளில் சேரும் குப்பைகளை சேகரிக்க ரூ.19.65 கோடி மதிப்பீட்டில் 500 எண்ணிக்கையிலான பேட்டரிமூலம் இயக்கப்படும் வாகனங்கள் மற்றும் 2,500 எண்ணிக்கையில் 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட மெட்டாலிக் காம்பாக்டர் குப்பை சேகரிக்கும் தொட்டிகள் கொள்முதல் செய்யப்படும். மேலும், 5 எண்ணிக்கையிலான டிரக்மீது பொருத்தப்பட்ட கிரேன்கள் கொள்முதல் செய்யப்படும்.

**28.** நகர்ப்புறங்களில் மழைநீர் வீணாகாமல் நிலத்திற்கடியில் சேமித்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடன் 50 பூங்காக்களில் குறைந்தபட்ச கான்கிரீட் மற்றும் ஏராளமான பசுமையைக் கொண்டிருக்கும் நீர்தங்கும் பூங்காக்கள் (SPONGE PARKS) ரூ.15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**29.** கலைஞர் நூற்றாண்டு விழாவின் தொடர்ச்சியாக, ரிப்பன் கட்டட வளாகத்தில் புதிய மாமன்றக்கூடம் ரூ.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**30.** சென்னை நகரை அழகுபடுத்தும்விதமாக ஆரோக்கிய நடைபாதை பெசன்ட் நகரில் அமைக்கப்பட்டது. இந்த நடைபாதை, மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதால் எம்.கே.பி. நகர் மத்திய நிழற்சாலை, மேற்கு நிழற்சாலை, மீனாம்பாள் சாலை, சத்தியமூர்த்தி நகர் பிரதான சாலை, ரிதர்டன் சாலை, ஆர்.ஏ. புரம் 2வது பிரதான சாலை, நங்கநல்லூர் 4, 5, 6 பிரதான சாலை மற்றும் பழைய திரு. வி.க. பாலம் ஆகிய இடங்களில் ஆரோக்கிய நடைபாதைகள் (HEALTH WALKWAY) அமைக்கப்படும்.

**31.** பெருநகர சென்னை மாநகராட்சியில் மாணாக்கர்களும் பொதுமக்களும் அறிவியல், தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் மற்றும் கணிதவியல் பற்றி அறிந்துகொள்ளும் வகையில் அறிவியல் பூங்கா பரீட்சார்த்த முறையில் முதற்கட்டமாக ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**32.** சென்னையில் தாழ்வான பகுதிகளில் பருவமழைக் காலங்களில் மழைநீர் தொட்டிகள்மூலம் மழைநீரை சேகரித்து, சேகரிக்கும் நீரை அதிக திறன்கொண்ட பம்புகள்மூலம் மழைநீர்க் கால்வாய் வழியாக விரைந்து வெளியேற்ற மழைநீர்த் தொட்டிகள் 15 இடங்களில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**33.** பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 8ல் உள்ள DR. விஸ்வேஸ்வரையா பூங்கா பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP MODE) சர்வதேச தரத்தில் மேம்படுத்தப்படும்.

**34.** பெருநகர சென்னை மாநகராட்சியின் புளியந்தோப்பு பகுதியில் உள்ள பெரம்பூர் பேரக்ஸ்சாலை இறைச்சிக்கூடம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

**35.** பெருநகர சென்னை மாநகராட்சியில் 7 புதிய எரிவாயு தகன மேடைகள் (LPG) ரூ.12 கோடிமதிப்பிட்டில் அமைக்கப்படும்.

### பேரூராட்சிகளுக்கான அறிவிப்புகள்

**36.** சேந்தமங்கலம், கீழ்பெண்ணாத்தூர், வி. புதூர், கருங்கல், தக்கோலம், வேலூர், ஏரல், காரியமங்கலம், நாசரேத், சாயர்புரம், பொத்தனூர், கீழப்பாவூர், குச்சனூர், இலஞ்சி மற்றும் பண்ணைக்காடு ஆகிய 15 பேரூராட்சிகளில் ரூ.125 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**37.** வேடசந்தூர், ஆலங்குளம், ஏரல், ஸ்ரீவைகுண்டம், கருங்கல், கிள்ளியூர், களியக்காவிளை, கல்லக்குடி, வாசுதேவநல்லூர், கீழ்பெண்ணாத்தூர், பொன்னமராவதி மற்றும் சின்ன சேலம் ஆகிய 12 பேரூராட்சிகளிலுள்ள பேருந்துநிலையங்கள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**38.** ஆரணி, நாட்ராம்பள்ளி, பாலக்கோடு, காவேரிப்பாக்கம், பேளூர், அரசிராமணி, அயோத்தியாபட்டினம், ஏத்தாப்பூர், அத்தாணி, மொடக்குறிச்சி, ஒலகடம், சிவகிரி (ஈரோடு), மங்களம்பேட்டை, நிலக்கோட்டை, தொண்டி, கோதநல்லூர், லக்கம்பட்டி, கொல்லன்கோவில், ஆயக்குடி, திருக்கழுக்குன்றம், சேந்தமங்கலம், ஒடையகுளம், பேராவூரணி, குடவாசல் மற்றும் அவிநாசி ஆகிய பேரூராட்சிகளில் ரூ.55 கோடி மதிப்பீட்டில் 25 சந்தைகள்அமைக்கப்படும்.

**39.** நடப்பாண்டில் 25 பேரூராட்சிகளில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.

**40.** பேரூராட்சிகளில் 300 கி.மீ. மண் சாலைகள் ரூ.220 கோடி மதிப்பீட்டில் தார்ச்சாலை, கான்கீரிட் மற்றும் பேவர்பிளாக் சாலைகளாக தரம் உயர்த்தப்படும்.

**41.** விவசாய விளைபொருட்களை நகர்பகுதிகளில் சந்தைப்படுத்த ஏதுவாக, நபார்டு திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளிலுள்ள சாலைகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**42.** 50 பேரூராட்சிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய அலுவலக கட்டடங்கள் ரூ.55 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**43.** தரங்கம்பாடி, வேளாங்கண்ணி, கணபதிபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 பேரூராட்சிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் கடற்கரை சுத்தம் செய்யும் வாகனம் கொள்முதல் செய்யப்படும்.

**44.** பேரூராட்சி பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைப் பாதுகாக்க ஏரி மற்றும் குளங்கள் தூர்வாரி கரைகள் மேம்படுத்தப்படும். மேலும், சாத்தியக்கூறு உள்ள இடங்களில் பொது மக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள ஏதுவாக ரூ.30 கோடி மதிப்பீட்டில் நடைபாதைகள் மற்றும் பசுமை வெளிகள் அமைக்கப்படும்.

**45.** 75 பேரூராட்சிகளில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கழிப்பிடங்கள் அமைக்கவும், 140 பேரூராட்சிகளில் ரூ.16.18 கோடி மதிப்பீட்டில் ஏற்கெனவே உள்ள சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களை புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**46.** பேரூராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை மேம்படுத்த ரூ.25 கோடி மதிப்பீட்டில் தள்ளுவண்டிகளுக்கு மாற்றாக 500 மின்கல வாகனங்கள் மற்றும் 150 இலகுரக வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**47.** பேரூராட்சி பகுதிகளில் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளால் சேதமடைந்த 575 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.315.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**48.** பேரூராட்சிகளின் பராமரிப்பிலுள்ள பள்ளிகளில் கூடுதல் நுண்ணறிவுமிக்க வகுப்பறைகள் (SMART CLASS ROOMS) ரூ.39.93 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். ஏற்கெனவே உள்ள பழுதடைந்த பள்ளிக் கட்டடங்கள் ரூ.23.95 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

**49.** 50 பேரூராட்சிகளில் திடக்கழிவுகளை கையாள, அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ரூ.10.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**50.** பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள வீடுகளில் மேற்கூறைகளில் சேகரமாகும் மழைநீரை குழாய்கள்மூலம் சேகரித்து வறண்ட பயன்படாத ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் பொது கிணறுகளில் செலுத்தி நிலத்தடி நீரை உயர்த்தும் வகையில் “மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகள்” அமைக்கப்படும்.

**51.** நகர்ப்புற உள்ளாட்சிகளில் நிலத்தடி நீரை பாதுகாத்து நிலையான சுற்றுச்சூழலை மேம்படுத்தும் வகையில் பேரூராட்சிகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரினை மறுசுழற்சி செய்ய 25 பேரூராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ.150 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**52.** பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே உள்ள 5 இறைச்சிக் கூடங்கள் புனரமைக்கப்படுவதோடு புதியதாக 5 இறைச்சிக் கூடங்கள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் அமைக்கப்படும்.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

**53.** திருச்சி மாவட்டம், மணப்பாறை ஒன்றியத்திலுள்ள 248 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் பொன்னம்பட்டி பேரூராட்சி, வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஒன்றியங்களைச் சேர்ந்த 591 ஊரக குடியிருப்புகள் மற்றும் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் (பகுதி), குளித்தலை மற்றும் தோகைமலை ஒன்றியங்களைச் சேர்ந்த 604 ஊரக குடியிருப்புகளிலுள்ள 4.85 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்திட்டம் சுமார் ரூ.800 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**54.** விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளில் உள்ள சுமார் 29,000 மக்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கான அறிவிப்புகள்

**55.** 100 ஆண்டுகளுக்குமேல் பழமையான கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை புனரமைத்து அதன் செயல்திறனை அதிகரிப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை கலந்தாலோசகர்மூலம் தயாரிக்கப்படும்.

**56.** 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகரோடு இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது புதிய தெருக்கள் உருவாகி குடியிருப்புகளின் வளர்ச்சி அதிகரித்து வருவதால், அந்தப் பகுதிகளிலுள்ள விடுபட்ட தெருக்கள் மற்றும் புதிதாக உருவான தெருக்களுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தகுந்த கலந்தாலோசகர்மூலம் தயாரிக்கப்படும்.

**57.** மீஞ்சூர் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் குடிநீர் அளவு போதுமானதாக இல்லாததால், திருவொற்றியூர், மணலி மற்றும் மாதவரம் பகுதிகளுக்குத் தேவையான குடிநீர் சரிவரவழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. ஆகையால், எதிர்கால குடிநீர்த் தேவையையும் கருத்தில் கொண்டு, புழல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வரும் மத்திய பிரதான குழாயிலிருந்து, மாதவரம் குடிநீர் உந்து நிலையத்திற்கு ரூ.40 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் குழாய் பதிக்கப்படும்.

**58.** சென்னை குடிநீர் வாரியத்தில் நீண்ட காலமாக உபயோகத்தில் இல்லாத அசையாச் சொத்துகளை கணக்கெடுத்து அவற்றிலிருந்து வாரியத்திற்கு வருமானம் ஈட்டும் வகையில், பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.

**59.** குடிநீர் அளவுமானி கொள்கை 2022ன்படி, சென்னை பெருநகரில் உள்ள சுமார் ஒரு இலட்சம் வணிக நிறுவனங்கள், பலமாடி குடியிருப்பு வளாகங்கள் மற்றும் வணிகத்துடன்கூடிய குடியிருப்புகளுக்கும் அளவுமானிகளை தனியார் பங்களிப்புடன், பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**60.** சென்னைக் குடிநீர் வாரியத்தின் பகுதி XIII (அடையாறு) பள்ளிப்பட்டு மற்றும் திருவான்மியூரில் உள்ள குடிநீர் விநியோக நிலையங்களிலிருந்து குடிநீர் விநியோகிக்கும் பகுதிகளுக்கு 24x7 குடிநீர் வழங்கும் முறையை உறுதிசெய்வதற்காக அப்பகுதியிலுள்ள பழுதடைந்துள்ள பழைய குழாய்களை மாற்றியமைத்தல், விடுபட்ட தெருக்களில் குழாய்களை பதித்தல், அனைத்து குடிநீர் இணைப்புகளிலும் அளவுமானிகளை பொறுத்துதல் போன்ற பணிகள் பன்னாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

**61.** சென்னை பெருநகரில் உள்ள 342 கழிவுநீர் உந்து நிலையங்களில், சில கழிவுநீர் உந்து நிலையங்களிலிருந்து வெளியேறும் துர்நாற்றம் குறித்து பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒழுங்குமுறைக்கு இணங்க காற்றின் தர நிலைகளை உறுதிசெய்ய கழிவுநீர் உந்து நிலையங்கள்/ சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்த நவீன உபகரணங்கள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**62.** தேர்வாய்கண்டிகை நீர்தேக்கத்திலிருந்து நீரை கண்ட லேறு-பூண்டி திறந்த வெளி கால்வாய் வழியாக, பூண்டி ஏரிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதனால், கசிவு, ஆவியாதல் மற்றும் பிற காரணங்களால் குறிப்பிடத்தக்க அளவு நீர் இழப்பு ஏற்படுகின்றது. எனவே தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, புழலில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குழாய் மூலம் நீரை நேரடியாக கொண்டு செல்லும் பணி ரூ.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**63.** சென்னை மாநகரோடு இணைக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்பட்ட அனைத்து குடிநீர்த் திட்டங்களையும் மறுசீரமைத்து, துணை மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 24x7 குடிநீர் விநியோகம் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் கலந்தாலோசகர்மூலம் ஆராயப்படும். மேலும், முகலிவாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம், இதற்கான முன்னோடி திட்டமாக எடுத்துக்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில், குறிஞ்சிப்பாடி தொகுதிக்கு நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் ரூபாய் 100 கோடி கொடுத்திருக்கிறார்கள். இந்தத் துறையில் எங்களுடைய அனைத்து அதிகாரிகளும் செயல்படுகிறார்கள் என்று சொன்னாலும், அதிக கவனத்தோடு எனக்கு மிக ஒத்துழைப்புத் தந்து இந்த மானியக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு கிட்டத்தட்ட இந்தப் புத்தகம் பார்த்தீர்களென்றால், இவ்வளவு பெரிய புத்தகம் மானியக் கோரிக்கையில் யாருக்கும் கிடையாது. எங்களுக்கு மட்டும்தான் இருக்கிறது.

எனவே, இதை தயார் செய்து தந்திருக்கிற நம்முடைய தலைமைச் செயலாளர் என்பது எங்களுடைய துறையின் செயலாளராக இருந்தவர். எனவே, அவருக்கும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் முருகானந்தம் அவர்கள், உமாநாத் அவர்கள், சண்முகம் அவர்கள், திருமதி அனு ஜார்ஜ் அவர்களுக்கும், எங்கள் துறையின் செயலாளர் கார்த்திகேயன் அவர்களுக்கும், சந்திரகாந்த் காம்ளே அவர்களுக்கும், எங்களுடைய ஆணையர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், முனைவர் விஜயகுமார் அவர்களுக்கும், ஹனீஸ் சாப்ரா அவர்களுக்கும், எங்களுடைய MD, TWAD தட்சிணாமூர்த்தி அவர்களுக்கும், MD, CMWSSB வினய் அவர்களுக்கும், DTP கிரண் குர்ராலா அவர்களுக்கும், DMA சிவராசு அவர்களுக்கும் மற்றும் அலுவல் பெருமக்களுக்கும், பொறியாளர் பெருமக்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலுரை வழங்கினார்.